# கலை ஒருங்கிணைந்த அமர்வுகள் -

# நான்காம் (4) வகுப்பு

## பாடம் - சுற்றுச்சூழல் கல்வி (EVS)

## கலை ஊடகம் - ஆயில் பஸ்டேல் (Oil Pastel)

## அதிகாரம் - விலங்கு இராச்சியம்



# அமர்வு திட்டம் -

## அமர்வு ஒன்று (1) - கூர்ந்து கவனித்து அவர்களின் சுய உருவப்படத்தை வரைதல்






## இந்த அமர்வுக்கான கல்வி இலக்குகள் -

• மாணவர்கள் மனிதர்களைப் பற்றிய புரிதலை வளர்த்துக் கொள்ளத் தொடங்குவார்கள்.

## இந்த அமர்வுக்கான கலை இலக்குகள் –

• மாணவர்கள் அவர்களின் சுய உருவப்படம் வரைதல் மூலம் கூர்ந்து கவனிக்கும் திறன்களை வளர்த்துக் கொள்வார்கள் மேலும் மற்ற விவரங்களுக்கும் கவனம் செலுத்துவார்கள்.

## தேவையான பொருட்கள் -

• A4 காகிதம்,

• எழுதுகோல்,

• முகம் பார்க்கும் கண்ணாடி (ஒரு மாணவருக்கு ஒன்று).

## செயல்பாடு -

## அறிமுகம் நேரம் - 5 நிமிடங்கள்

- மாணவர்களுக்கு கவனிக்கும் திறன்கள் மற்றும் தங்களது சுய உருவப்படத்தின் யோசனைகளையும் அறிமுகப்படுத்துங்கள்.
- அவர்ககளுக்கு அவர்களின் சுய உருவப்படங்களை கண்ணாடியைப் பயன்படுத்தி உருவாக்கப்போகிறார்கள் என்று தெரியட்டும்.

## செய்துகாட்டுதல் நேரம் - 10 நிமிடங்கள்

• மாணவர்களுக்கு ஒரு கையில் கண்ணாடியைப் பிடித்துகொண்டு எப்படி கவனமாக கண்களால் கவனிப்பது என்று செய்துகாட்டுக.

• மாணவர்களிடம் அவர்களுடைய பரிந்துரைகளைக் கேளுங்கள்: எனது தலை என்ன வடிவம்? என் கழுத்து என்ன வடிவம்? கண்கள்? காதுகள்? முதலியன.

• மாணவர்கள் உங்களுக்கு பரிந்துரைகளை கூறும்போது, உங்கள் முகத்தின் வடிவங்களை A4 காகிததில் வரைந்து காட்டுக.

• ஸ்கெட்சிங் என்பது வடிவங்களை கீழே வைக்கும்போது லேசாக வரைவது என்று மாணவர்களுக்கு தெரியப்படுத்துங்கள். அழுத்தி வரைவதற்கு முன் ஏன் ஸ்கெட்ச் செய்கிறோம் என்று அவர்களிடம் கேளுங்கள்.

• கண்ணாடியைப் பார்த்து விளிம்புகளை மென்மையாகவும், வரைபடத்தை உருவாக்க ஸ்கெட்சிலிருந்து இறுதி வரிகளை அழுத்தி வரைவதற்கு செய்துகாட்டுக.

• உங்கள் முகத்தில் அவர்கள் கவனிக்கக்கூடிய விவரங்களைப் பற்றி உரையாடலைத் தொடங்குங்கள். உதாரணத்திற்கு - கண்கள், மூக்கு, கண் இமைகள், முடி போன்றவை.

• கண்ணாடியை கவனமாகப் பார்ப்பதையும், அவுட்லைன் விவரங்களை சேர்க்க வடிவங்களை கீழே வைப்பதையும் செய்துகாட்டுக.

• ஒன்று அல்லது இரண்டு விவரங்களைக் காண்பித்து, நீங்கள் கண்ணாடியை எவ்வாறு குறிப்பிடுகிறீர்கள் என்றும் கண்ணாடியில் காணப்படுவதை மட்டும் எவ்வாறு சேர்ப்பது என்பதை குறித்தும் காட்டுக.

• மாணவர்கள் தங்கள் இடங்களுக்கு திரும்பி வந்தவுடன் அவர்களின் சுய உருவப்படங்களில் வேலை செய்வார்கள் என்பதை அவர்களுக்கு தெரியப்படுத்துங்கள்.

## செயல்பாட்டு நேரம் நேரம் - 20 நிமிடங்கள்

• மாணவர்களுக்கு கண்ணாடியை குடுத்த பின், அவர்களை 2 நிமிடங்கள் கவனிக்க விடுங்கள்.

• பின்னர் காகிதம் மற்றும் எழுதுகோலினை அவர்களுக்கு ஒப்படைக்கவும்.

• மாணவர்களுக்கு அவர்களின் முகங்களை தொடர்ச்சியாக கூர்ந்து கவனிக்கவும், பின்னர் ஸ்கெட்சினை உருவாக்க அவர்களின் முகங்களுக்கு

வடிவங்களைச் சேர்க்கவும், பின்னர் வரைபடத்தை அழுத்தி வரையவும் மற்றும் வரைபடத்தை முடிக்க அணைத்து விவரங்களையும் சேர்க்கவும் நினைவூட்டுங்கள்.

**பிரதிபலிப்பு** **நேரம் - 10 நிமிடங்கள்**

• அனைவரும் கவனிக்க மாணவர்களின் கலைப்படைப்புகளை மையத்தில் வைக்கவும்.

• பயன்படுத்தப்பட்ட வடிவங்களைப் பற்றியும், சேர்க்கப்பட்ட விவரங்களைப் பற்றியும் அவர்களுடன் சுருக்கமாக பேசவும்.

குறிப்பு : ***ஆசிரியர்கள் மாணவர்களுடன் மனிதர்களைப் பற்றியும் அவர்களின் பண்புகளைப் பற்றியும் உரையாடலைத் தொடங்கலாம்.***

**<u>அமர்வு இரண்டு (2) - கூர்ந்து கவனித்து விலங்கு உருவப்படத்தின் வரைபடத்தை வரைதல்</u>**



## இந்த அமர்வுக்கான கல்வி இலக்குகள் -

• மாணவர்கள் விலங்குகளைப் பற்றிய புரிதலை வளர்த்துக் கொள்ளத் தொடங்குவார்கள்.

## இந்த அமர்வுக்கான கலை இலக்குகள் -

• விலங்குகளின் புகைப்படங்களை கூர்ந்து கவனிப்பதன் மூலம் மாணவர்கள் கண்காணிக்கும் திறன்களை வளர்ப்பார்கள்.

## தேவையான பொருட்கள் -

• வரைவதற்கு A4 காகிதம்,

• எழுதுகோல்,

• விலங்குகளின் முகங்களின் புகைப்படங்கள்.

## செயல்பாடு -

**அறிமுகம்** **நேரம் - 10 நிமிடங்கள்**

• மாணவர்கள் கவனமாக வரைபடத்தை கவனிப்பது மற்றும் அமர்வு ஒன்றில் செய்ததையும் நினைவுட்டுங்கள்.

• இன்று விலங்குகளின் உருவப்படத்தை கவனமாக கண்காணித்து வரைபடத்தை உருவாக்குவார்கள் என்பதை மாணவர்களுக்கு தெரியப்படுத்துங்கள்.

• விலங்குகளைப் பற்றி ஒரு விவாதத்தைத் தொடங்குங்கள், அவர்கள் அறிந்த சில விலங்குகள் என்ன? அவற்றின் சில பொதுவான பண்புகள் என்ன? போன்றவை.

**செய்துகாட்டுதல்** **நேரம் - 10 நிமிடங்கள்**

• மாணவர்களுடன் சேர்ந்து ஒரு விலங்கின் படத்தைப் பாருங்கள்.

• அவர்கள் பார்க்கும் விலங்கு எது என்று அவர்களிடம் கேளுங்கள்.

• மாணவர்களிடம் அனைத்து விலங்குகளின் படங்களும் எளிய கோடுகள் மற்றும் வடிவங்களால் ஆனவை என்று சொல்லுங்கள்.

• இன்று விலங்குகளின் படத்தை கவனமாக நோக்க அவர்கள் அவர்களின் கண்களைப் பயன்படுத்துவார்கள் என்று அவர்களிடம் சொல்லுங்கள். அவர்கள் விலங்குகளின் வெவ்வேறு வடிவங்கள் மற்றும் விலங்குகளின் உருவப்படத்தின் எளிய ஓவியத்தை உருவாக்க இந்த வடிவங்கள் பயன்படுத்துவார்கள் என்பதில் கவனம் செலுத்துவார்கள்.

• விலங்கின் வெவ்வேறு வடிவங்களை காட்டி, மாணவர்களிடம், “இந்த விலங்கின் தலை என்ன வடிவம்?" என்று கேளுங்கள்.

• மாணவர்கள் வெவ்வேறு வடிவங்களை சுட்டிக்காட்டும்போது, உங்கள் A4 காகிதத்தில் வடிவங்களை வரைவதற்குத் தொடங்குங்கள்.

• உங்கள் காகிதத்தில் அனைத்து வடிவங்களும் வரைந்தவுடன், அவர்களுக்கு விவரங்களை கவனமாக பார்க்க கற்றுக்கொடுங்கள்.

• மாணவர்களின் உதவியோடு உங்களின் விலங்கின் படத்திற்கு சில விவரங்களைச் சேர்க்கவும் மற்றும் வரைபடத்தை முடிப்பதற்கு எவ்வாறு அவுட்லைனை அழுத்தி வரைவது என்பதனையும் செய்துகாட்டுங்கள்.

**செயல்பாட்டு நேரம்** **நேரம் - 20 நிமிடங்கள்**

• வேலை காலத்தின் தொடக்கத்தில் விலங்கு படங்களை கொடுக்கவும்.மாணவர்களுக்கு புகைப்படத்தைக் கவனிக்கவும் மற்றும் அவ்விலங்குகளை உருவாக்கும் வடிவங்களைப் பார்க்கவும் சில நிமிடங்கள் தரவும்.

• இப்போது A4 காகிதம் மற்றும் எழுதுகோலினை கொடுக்கவும்.

• வடிவங்களைப் பயன்படுத்தி ஒரு ஓவியத்துடன் தொடங்க அவர்களிடம் கேளுங்கள், பின்னர் விரிவான வரைபடத்தை உருவாக்க விவரங்களைச் சேர்க்கவும்.

**பிரதிபலிப்பு** **நேரம் - 10 நிமிடங்கள்**

• அனைவரும் கவனிக்க மாணவர்களின் கலைப்படைப்புகளை மையத்தில் வைக்கவும்.

• ஒரு குழந்தையின் கலைப்படைப்பைத் தேர்ந்தெடுத்து, மற்ற மாணவர்களிடம் அதில் பயன்படுத்தப்பட்டுள்ள சில வடிவங்கள் மற்றும் அதில் சேர்க்கப்பட்ட விவரங்களை அடையாளம் காணச் சொல்லுங்கள்.

*குறிப்பு : ஆசிரியர்கள் மாணவர்களுடன் விலங்குகள் மற்றும் அவற்றின் பண்புகள் பற்றிய உரையாடலைத் தொடங்கலாம்.*

*ஆசிரியர்கள் மாணவர்களை உக்கவித்து, விலங்குகள் மற்றும் மனிதர்களுக்கு இடையிலான வித்தியாசம் மற்றும் ஒன்றிய பண்புகள் பற்றி விவாதங்களைத் தொடங்கலாம்.*

ARTSPARKS
CURIOSITY. CREATIVITY. LEARNING.

## அமர்வு மூன்று (3) - ஆயில் பஸ்டேல் ஆய்வு



**இந்த அமர்வுக்கான கலை இலக்குகள் -**

• மாணவர்கள் ஆயில் பஸ்டேல் பரிசோதனை மற்றும் ஆய்வு மூலம் விசாரணை திறன்களை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

**தேவையான பொருட்கள் -**

• ஆயில் பாஸ்டல் (1 பெட்டியினை 4 மாணவர்கள் பகிர்ந்துக்கொள்ளலாம்),

• கருப்பு கட்டுமான காகிதம் (1/4),

• குறிக்க உதவும் கருவிகள் (பிளாஸ்டிக் ஸ்பூன், ஃபோர்க், குமிழியுறை, ரிப்பன், நூல்கள், டூத்பிக் போன்றவை. கண்ணாடி துண்டுகள், உலோக பொருட்கள் போன்ற கூர்மையான அல்லது தீங்கு விளைவிக்கும் பொருட்கள் இல்லை என்பதை உறுதி செய்யவும்.)

**செயல்பாடு -**

**அறிமுகம்** **நேரம் - 5 நிமிடங்கள்**

• இன்று நாம் ஆயில் பாஸ்டல்கள் பயன்படுத்தி பணியாற்றப் போவதை மாணவர்களிடம் சொல்லுங்கள்.

• ஆயில் பாஸ்டல் மற்றும் கிரேயன்களுக்கு இடையிலான வேறுபாடு குறித்து அவர்களிடம் பேசுங்கள்.

*(க்ரேயன்கள் மெழுகினால் செய்யப்பட்டவை மற்றும் ஆயில் பாஸ்டல்கள் எண்ணெயால் செய்யப்பட்டவை. எண்ணெயின் ஒரு முக்கியமான சிறப்பியல்பு அது சரிவுகள் / வழுக்குதல் கொண்டவை. இதேபோல், ஆயில் பேஸ்டலினை காகிதத்தில் தடவும்போது அதை படரவைக்க உங்கள் விரலைப் பயன்படுத்தலாம்.அது காகிதத்தில் படர்ந்துவிடும்; இதன் மூலம் பல வண்ணங்களை கலந்து அதன் மேல் குறிக்க முடியும்.)*

**செய்துகாட்டுதல்** **நேரம் - 10 நிமிடங்கள்**

• மாணவர்களுக்கு பல்வேறு குறிகள் மற்றும் கோடுகளை பயன்படுத்தி, புதிய வண்ணங்களை உருவாக்க ஆயில் பாஸ்டல்களின் தரத்தின் ஆய்வு மூலம் எவ்வாறு வண்ணத்தை ஒன்றாகக் கலந்து உருவாக்குவது என்பதை செய்துகாட்டுக.

• மாணவர்களுக்கு குறிகள் மற்றும் கடினமான மேற்பரப்பினை ஆராய பல்வேறு கருவிகளை எவ்வாறு பயன்படுத்துவது என்பதை செய்துகாட்டுக.

• மாணவர்களிடம் அனைத்து நுட்பங்களையும் சோதிக்க தயங்க வேண்டாம் என்ற கூறுங்கள் மற்றும் புதிய விஷயங்களை அவர்கள் சிந்திக்க ஊக்குவிக்கவும்.

**செயல்பாட்டு நேரம்** **நேரம் - 20 நிமிடங்கள்**

• மாணவர்கள் தங்கள் ஆய்வுகளைத் தொடங்க தேவையான அனைத்து பொருட்களையும் வழங்கவும்.

• வகுப்பைச் சுற்றி சென்று பல்வேறு வழிகளில் பொருளைப் பயன்படுத்த அவர்களை ஊக்குவிக்கவும்.

• அவர்கள் வண்ணங்களை கலக்க தொடங்கட்டும், கலப்பதை ஆராய்ந்த பிறகு அதன் மேல் குறியிடுகளை குறிக்கட்டும்.

**பிரதிபலிப்பு** **நேரம் - 10 நிமிடங்கள்**

• அனைவரும் கவனிக்கும்படி கலைப்படைப்புகளை மையத்தில் வைக்கவும்.

• சில மாணவர்களின் ஆய்வுகளை வகுப்போடு பகிர்ந்து கொள்ளுங்கள்.

• இந்த ஆய்வுகளை முகமூடிகளில் பயன்படுத்துவார்கள் என்று உங்கள் மாணவர்களுக்கு தெரியப்படுத்துங்கள்.

**அமர்வு நான்கு (4) – விலங்கு மற்றும் மனித முகமூடியை உருவாக்குங்கள்**



ARTSPARKS
CURIOSITY. CREATIVITY. LEARNING.

## இந்த அமர்வுக்கான கல்வி இலக்குகள் -

• மனிதர்கள் மற்றும் விலங்குகளுக்கு இடையிலான வேறுபாட்டைப் பற்றிய புரிதலை மாணவர்கள் மேலும் வளர்த்துக் கொள்வார்கள்.

## இந்த அமர்வுக்கான கலை இலக்குகள் -

• மாணவர்கள் முகமூடியை உருவாக்குவதன் மூலம் சிக்கல் தீர்க்கும், நெகிழ்வான சிந்தனை, விடாமுயற்சி போன்ற திறன்களை உருவாக்கலாம்.

• பொருட்களைப் பகிர்வதன் மூலம் மாணவர்கள் ஒத்துழைக்கும் பண்பினை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

## தேவையான பொருட்கள் -

• ஆயில் பாஸ்டல் (1 பெட்டியினை 4 மாணவர்கள் பகிர்ந்துக்கொள்ளலாம்),

• கருப்பு கட்டுமான காகிதம் (1/4),

• அமர்வு மூன்றிலிருந்து (3) ஆயில் பாஸ்டல் பற்றிய ஆய்வு,

• அமர்வு ஒன்று (1) மற்றும் இரண்டிலிருந்து (2) வரைபடங்களை கவனமாக கவனித்தல்,

• கத்தரிக்கோல்.

## செயல்பாடு -

**அறிமுகம்** **நேரம் - 5 நிமிடங்கள்**

• முகமூடி பற்றிய விவரங்களை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்துங்கள், மேலும் இன்று அவர்களின் சுய உருவப்படம் / விலங்கு உருவப்படம் அடங்கிய முகமூடியினை உருவாக்குவார்கள் என்று தேரியப்படுத்துங்கள்.

• ஆயில் பாஸ்டல்களைப் பயன்படுத்தி அவர்கள் செய்த பல்வேறு ஆய்வுகளை அவர்களுக்கு நினைவூட்டுங்கள், இந்த ஆய்வுகளை அவர்கள் முகமூடியில் பயன்படுத்துவார்கள் என்பதை அவர்கள் அறிந்து கொள்ளட்டும்.

**செய்துகாட்டுதல்** **நேரம் - 10 நிமிடங்கள்**

• மாணவர்களுடன் அவர்கள் பயன்படுத்த விரும்பும் மனித முகத்தின் பாகங்கள் மற்றும் விலங்கு முகத்தின் பாகங்கள் பற்றி கலந்துரையாடுங்கள்.

• கறுப்பு அட்டை காகிதம் ஒற்றை வண்ண ஆயில் பாஸ்டல் பயன்படுத்தி எவ்வாறு வடிவங்களை கவனமாக பயன்படுத்துவது என்று செய்துகாட்டுங்கள்.

• மாணவர்களின் உதவியுடன் படத்தின் வெளிப்புறத்தை வெட்டி, வெட்டப்பட்ட துண்டுகளை ஒதுக்கி வைக்கவும்.

*(இவை பிற நடவடிக்கைகளுக்கு பயன்படுத்த கைகொடுக்கும்.)*

• செய்யப்பட்ட பல்வேறு ஆயில் பாஸ்டல் ஆய்வுகளைப் பாருங்கள், மாணவர்களிடம் முகமூடியின் எந்தப் பகுதியில் எந்த ஆய்வினை பயன்படுத்த வேண்டும் என்று கேளுங்கள்.

• இப்போது அவர்களின் முகமூடிகளில் வேலை செய்ய அவர்களுக்கு நேரம் வழங்கப்படும் என்பதை மாணவர்களுக்கு தெரியப்படுத்துங்கள்.

**செயல்பாட்டு நேரம்** **நேரம் - 20 நிமிடங்கள்**

• முகமூடியை உருவாக்க மாணவர்களுக்கு உருவப்படங்களை கொடுக்கவும்.

• முகமூடியின் வெளிப்புறத்தை வரைய மாணவர்கள் ஒரு ஆயில் பாஸ்டல் வண்ணத்தை எடுக்கட்டும்.

• வெளிப்புறத்தை மட்டும் வெட்டவும், கத்தரிக்கோலைக் கையாளும் போது கவனமாக இருக்கவும் அவர்களுக்கு நினைவூட்டுங்கள்.

• அதன் பிறகு ஆயில் பாஸ்டல் பெட்டிகளை கொடுக்கவும் மற்றும் அவற்றின் ஆய்வுத் தாள்களை குறிப்புக்காக வழங்கவும்.

**பிரதிபலிப்பு** **நேரம் - 10 நிமிடங்கள்**

- அனைவரும் கவனிக்க கலைப்படைப்புகளை மையத்தில் வைக்கவும்.

- இதை முகத்தில் பயன்படுத்த குழந்தைகளை ஊக்குவிக்கவும். இதனை கவனிப்பதன் மூலம் மற்றும் முகமூடிகள் மூலம் மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் இடையிலான வித்தியாசத்தைப் பற்றிய உரையாடல்களை எளிதில் அறிவார்கள்.